# திருப்பாவை முதல்பதிகக் கருத்துரை

ஆர். சேஷாத்ரி ஐயங்கார்
திருவழுந்தூர் தேவஸ்தானம்
மாயூரம்.

ஸ்ரீயப்பதியான ஸர்வேச்வரன் வராஹவதாரம் பண்ணி ப்ரளயார்ணவமக்னையான ஸ்ரீ பூமி பிராட்டியை உத்தரிப்பித்து ஆச்வாஸம் பண்ண பூமி பிராட்டி அப்பொழுது பெருமாளைப் பார்த்து ஸம்ஸாரார்ணவ மக்னர்களான சேதநர்களுடைய துக்கத்தைக் கண்டு ஸஹிக்க மாட்டாமல் அவர் களுடைய நிஸ்தரணோபாயத்தை அருளிச் செய்யவேணுமென்று ப்ரார்த்திக்க, பெருமாளும் பலபடி யான உபாயங்களை அருளிச் செய்துகொண்டு, கடைசியாக அந்த்ய ஜாதியிலே பிறந்தானாய் தன்னாலே நம்பாடுவான் என்று அபிமானிக்கப்பட்டு அதையே தனக்கு அன்வர்த்தநாமாவாக உடைய ஒரு விஷ்ணு பக்தன் தன் பக்தியின் மிகுதியாலே அநந்ய ப்ரயோஜநமாக தினந்தோறும் தன் புகழைப் பாடிக்கொண்டு திருக்குறுங்குடி என்னும் திவ்யதேசத்தில் வசித்து வந்து, ஒரு ஸமயம் கார்த்திகை மாதம் சுக்கிலபக்ஷ த்வாதசியன்று ப்ராம்ம முகூர்த்தத்தில் எழுந்து பகவானைப் பாட வீணாபாணியாய்க் கிளம்பிவருகையில் மத்யே மார்க்கத்தில் ஒரு ப்ரும்ம ராக்ஷஸனால் தகையப்பட்டு , தான் பகவத்ஸந்நிதி யில் வழக்கம்போல் இன்று பாடவேண்டிய பாட்டுக்களைப் பாடிவிட்டு அவச்யம் உனக்கு ஆஹாரமாக வருகிறேனென்று அநேக ஸத்யங்களைப் பண்ணிக்கொடுத்து, அந்த ராக்ஷஸன் அனுமதி பெற்று, போய் பகவானை விசேஷமாகப் பாடி ஸந்தோஷிப்பித்து, ஸத்யம் தப்பாமல் மீண்டு வர , ராக்ஷஸனும் இவனுடைய பக்தியையும் ப்ராணனில் விரக்தியையும் கண்டு, இவன் மஹானுபாவனென்று நினைத்து இவனைச் சாப்பிடுவதை விட்டு, இவன் இன்று பாடின பாட்டின் பலத்தைத் தந்து, தன்னை கோரமான இந்த ராக்ஷஸ ஜன்மாவிலிருந்து விடுவிக்க வேணுமென்று நினைத்து, பலமுறைப்பாட்டில் ஒன்றாகிய கைசிகமென்னும் ஸ்வரத்தின் ( பண்ணின்) ப்ரபாவத்தால் ராக்ஷஸனை கோரமான ராக்ஷஸ ஜன்மத்திலிருந்து விடுவித்து காலக்ரமத்தில் "ஏதத்ஸாமகாயந்நாஸ்தே" என்ற நம் பெரிய வீடாகிய மோக்ஷத்தையும் கொடுப்பதாக நாம் முன்பு விபீஷணனுக்கு அபயப்ரதானம் பண்ணினாப்போலே பண்ணினான் காண், என்று பகவான் சொல்லக்கேட்டு, பூமிபிராட்டியும் எல்லா உபாயங்களிலும் இந்த காநரூபமான உபாயமே சிறந்ததாக திருவுள்ளம்பற்றி , இதை தான் பூலோகத்திலே அவதரித்து அனுஷ்டித்துக் காட்டி எல்லாரும் உஜ்ஜீவிக்கும்படி செய்யவேணுமென்று திருவுள்ளம் பற்றி, அதற்குத் தகுந்த ஸமயத்தை ப்ரதீக்ஷித்துக் கொண்டிருக்க, பின்பு கலியுகத்தில் ஸ்ரீவில்லிபுத்தூர் என்கிற திவ்ய க்ஷேத்திரத்தில் அவதரித்து, மற்றையாழ்வார்களுடைய பக்தியைக் காட்டிலும் விஞ்சியதாய் ப்ரேமரூபாபன்னமான பக்தியினால் ஸ்வரூப ஞானத்தை மறந்து ரக்ஷ்யரக்ஷக பாவத்தை மாறாடி மற்றையாழ்வார்களைப் போலே எம்பெருமானிடத்தில் பகவத்குணாணுபாவமாகிற தங்கள் ஸத்தா ஸம்ருத்திகளை ப்ரார்த்திக்காமல் அவன் திவ்யவிக்ரஹ ஸௌந்தர்ய ஸௌகுமார்யங்களில் மிகுந்த ஆழங்கால்பட்டு அவனுக்கு என்ன வருகின்றதோ வென்று அதிசங்கை கொண்டு பல்லாண்டு பல்லாண்டு என்று அவனுடைய ஸத்தாஸ்ம்ருத்திகளையே ப்ரார்த்தித்து அத்தையே தனக்கு தாரகமாகக் கொண்ட, மிகுந்த பகவத் விஷய ஆர்வத்தினால் பெரியாழ்வாரென்று அன்வர்த்தப் பெயர் பெற்ற விஷ்ணு சித்தர் என்ற பக்தர் க்ருஷ்ணனிடத்தில் பரம பக்தி கொண்டு சூட்டு நன்மாலைகள் தூயனவேந்தி விண்ணோர்கள் நன்னீராட்டியும் தூபந்தராநிற்கவே, அங்கு ஓர் மாயையினால் ஈட்டிய வெண்ணெய் போந்த க்ருஷ்ணன், தான் கம்ஸவதார்த்தமாக மதுரைக்கு எழுந்தருளியபோது பழைய சூட்டுநன்மாலைகளின் வாஸனை பின்னாட்டி தான் மாலாகாரர் க்ருஹத்திலே எழுந்தருளி, மாலையை யாசித்து, ப்ரஸாதபரமௌ நாதௌ மம கேஹ முபாகதௌ – தந்யோஹம் அமர்ச்சயிஷ்யாமி இதிஆ மால்யோபஜிவநஹ என்று

மாலாகாரரால் பரம ப்ரீதியோடு புஷ்பத்தினால் அலங்கரிக்கப்பட்டபடியை அனுஸந்தித்து தானும் அவ்வூரில் கோவில் கொண்டெழுந்தருளியிருக்கும் வடபத்ரஸாயிக்கு, நந்தவனம் செய்து புஷ்பகைங்கர் யம் செய்து கொண்டு வருகையில் ஸ்ரீபூமி பிராட்டி அந்த நந்தவனத்தில் துளஸி பாத்தியில் குழந்தை வடிவாய் எழுந்தருளியிருக்க, அதைக் கண்டு பெரியாழ்வாரும் தனக்கு தைவால்லப்தமான தென்று ஸந்தோஷத்தோடு அந்தப் பெண்ணை க்ருஹத்துக்கு எடுத்துச் சென்று தேவிகளிடம் கொடுத்து, **கோதை** என்று திருநாமம் சார்த்தி வளர்த்துக்கொண்டு வருகையில், அந்தப் பெண்ணின் ஜன்மமேபிடித்து வளர்ந்து வரும் பகவத் பக்தியைக் கண்டு களித்து பகவதவதாரக் கதைகளை யெல்லாம் சொல்ல, அதைக் கேட்ட கோதை பரமபாகவதாரான பெரியாழ்வாரின் புத்திரியாகையாலும், தன் ஜன்ம வைபவத்தாலும் க்ருஷ்ணனிடத்தில் பெருவேட்கை கொண்டு, அவனை எப்படியாகிலும் தழுவி முழுகி பரிமாறவேணு மென்று ஆசை கொண்டு, அது காலாந்தரமாகையாலே கூடாமையால் அவனும் கோபிகைகளும் ஜலக்ரீடை பண்ணின யமுனா நதி, ஸஞ்சரித்த ப்ருந்தாவனம், கோவர்த்தனம் முதலிய இடங்களையாவது கண்டு ஆச்வாஸத்தையடையலாமென்று பார்த்தவிடத்திலும், அது தேசாந்திரமாகையால் அவனையே நினைந்து உள்கரைந்துருகி துர்பலையான தனக்குப் போகக் கால் நடை தராமையால் மிகவும் தளர்ந்து, கடைசியாக க்ருஷ்ணன் ராஸக்ரீடையில் பிரிந்தபோது கோபஸ்த்ரீகள் “துஷ்டகாளீய திஷ்டாத்ர க்ருஷ் ணோஹம் இதி ச அபரா” என்று க்ருஷ்ணனின் அவதார சேஷ்டிதங்களை அனுகரித்து தரித்த படியை உணர்ந்து, ஒரு சமயம் க்ருஷ்ணன் தன் அழகாலும் குணத்தாலும் திருவாய்ப்பாடியிலுள்ள பஞ்சலக்ஷங் குடியில் பெண்களையும் பரவசப் படுத்திகொண்டிருக்கிற படியைக் கண்டு , கோபவ்ருத்தர்கள் க்ருஷ்ணன் மேல் அதிசங்கை கொண்டு பெண்கள் க்ருஷ்ணன் முகத்தில் விழிக்ககூடாதென்று பெண்களை நிலவரை களிலே யடைக்க, பெண்கள் பாக்கியத்திற்கே அடியனான க்ருஷ்ணஸங்கல்பத்தால் மழையின்றிக்கே யொழிய, கோபவ்ருத்தர்கள் ஒன்றுகூடி, பெண்கள் வர்ஷார்த்தமாக நோன்பு நூற்கக் கடவர்கள், இந் நோன்புக்கு க்ருஷ்ணன் ஸஹரிக்கக்கடவன் என்று நிச்சயித்து க்ருஷ்ணனையும் பெண்களையும் அழைத்து நியமிக்க, க்ருஷ்ணனும் உடனே ஸம்மதித்தால் கோபவ்ருத்தர்களுக்கு அதிசங்கை அதிகரிக்கும் என்று சற்று மறுத்து , மருட்டியவர்கள் நிர்பந்திக்க ஒருவாறு ஸம்மதித்து , கோபர்கள் போனதும், க்ருஷ்ணன், பெண்களுக்கும் தனக்கும் ஸமாகமம் நேர்ந்ததை பெண்களுடன் ச்லாகித்து, பெண்காள் ! நாமிந்த இரவிலே அதிசங்கை உண்டாகும்படி அதிக நாழிகை இருக்கக் கடவோம் அல்லோம்,ஆகையால் நீங்கள் உங்கள் க்ருஹம் போய் விடியற்காலம் எல்லாரும் எழுந்து நோன்புக்குக் குளிக்க நம்மை எழுப்ப வாருங்கள் என்று நியமித்து, தானும் பெண்கள் விச்லேஷம் பொறுக்க மாட்டாமே நப்பின்னை பிராட்டி திருமாளிகையிலே புக்கான், பெண்களும் பரஸ்பர ஸஹாயத்தால் அவரவர்கள் திருமாளிகையிலேபுக்கு, கண் உறங்காமையால் விழித்துக் கொண்டவர்கள் க்ருஷ்ண குண சேஷ்டிதங்களை நினைந்து கொண்டு கிடக்கிறவர்களை உணர்த்தி எல்லாரும் கூடி நந்தகோபர் திருமாளிகையிலே சென்று திருமாளிகைக் காப்பான், திருவாசல்காப்பான், நந்தகோபர், யசோதை, நப்பின்னைப் பிராட்டி, பலராமன் முதலியவர்களை எழுப்பி அவர்கள் புருஷகாரமாக க்ருஷ்ணனை எழுப்பி, நோன்பு என்னும் வ்யாஜ்யத்தால் ஸர்வஸ்வாமியான உனக்கு ஸ்வத்தான இந்த ஆத்மவஸ்துவானது தன் ஸ்வரூபத்துக்குச் சேர்ந்த உன் அடிமையையே யாவதாத்ம பாவி புருஷார்த்தமாக அடையும்படி செய்யவேணுமென்று பிரார்த்தித்துப் பெற்றார்கள் என்று பெரியோர்கள் சொல்லக் கேட்டு ஆண்டாளும் அத்தையே அனுகரிக்க மனோரதங் கொண்டு ஸ்ரீவில்லிப்புத்தூரையே திருவாய்ப்பாடியாகவும், வடபத்ரசாயியையே கண்ணனாகவும், அவ்வூரில் பெண்களையே பஞ்சலக்ஷம் கோபிகைகளாகவும் தானும் அவர்களில் ஒருத்தி யாகவும் பாவித்து அனுகரித்து தரிக்கப் பார்க்கிறாள்.